# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1986/25 - 2016 සැප්තැම්බර් මස 28 වැනි බදාදා - 2016.09.28

*1986/25 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டம்***

தேசிய விளையாட்டுக்கள் சங்கக் கட்டளைத் தொடரின் 54 (3) ஆம் வாசகத்தின் கீழான கட்டளை

*விளையாட்டுக்கள் அமைச்சர் தயாசிரி ஜயசேகர ஆகிய என்னால், இலங்கை ஜுடோ சங்கத்தின் இடைக்கால நிர்வாகக் குழுவின் கால எல்லை 2015.07.15 ஆந் திகதியுடன் நிறைவடைவதனால் சட்ட ரீதியாக உத்தியோகத்தர் தெரிவு மீண்டும் நடாத்தப்படும் வரை அச்சங்கத்தின் செயற்பாடுகளை சிறந்த முறையில் முன்னெடுப்பதற்காக தகுதிவாய்ந்த பொறுப்பாளராக விளையாட்டுக்கள் அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமான சாமசுந்தர ஏகநாயக்க ராஜவர்தன தென்னகோன் முதியன்சேலாகே சமன் பிரியந்த பண்டார அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக, 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் 39 (I) பிரிவிற்கமைய இலங்கை ஜுடோ சங்கத்திற்கு இத்தால் அறிவிப்பதுடன், 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் 41 ஆவது பிரிவின் கீழ் 2013, ஓகத்து மாதம் 30 ஆந் திகதி வெளியிடப்பட்ட 1825/38 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் 54 (3) ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய விளையாட்டுக்கள் சங்கம் தொடர்பான கோவைக்கமைய எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய,*

*விளையாட்டுக்கள் அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமான சாமசுந்தர ஏகநாயக்க ராஜவர்தன தென்னகோன் முதியன்சேலாகே சமன் பிரியந்த பண்டார அவர்களுக்கு இலங்கை ஜுடோ சங்கத்தின் புதிய உத்தியோகத்தர் சபையை தேர்ந்தெடுக்கும் வாக்கெடுப்பிற்கான ஒழுங்குகளை மேற்கொள்ள மற்றும் நடாத்த இத்தால் உத்தரவு வழங்குகிறேன்.*

*சட்டத்தரணி தயாசிரி ஜயசேகர,*
*விளையாட்டுக்கள் அமைச்சர்.*

*கொழும்பு,*
*2016, செத்தெம்பர் 21.*

*10- 295*



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*